07.06.2024 **STC**.10/2022 **வாதி தரப்பு சாட்சி 1 சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**பெயர் - கணேஷ். தகப்பனார் பெயர் - பாலன்.**

**குறுக்கு விசாரணை : எதிரி தரப்பில் :**

1) எனக்கு தமிழ், ஆங்கிலம் எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் D.ME., படித்துள்ளேன். நான் ரியல் எஸ்டேட் மற்றும் வீட்டு கடன் பெற்று தரும் தொழில் செய்து வருகிறேன். எதிரியை மாதவன் என்ற எனது நண்பர் மூலம் பழக்கமாவார். மாதவன், நான் செய்யும் தொழிலை தான் செய்து வருகிறார். எதிரிக்கு எந்த வருடம் பணம் கொடுத்தேன் என்றால் 2021 ஆம் ஆண்டு ரூ.4 லட்சம் கடன் கொடுத்தேன். எதிரிக்கு கடனை ரொக்கமாக அன்னூரில் வைத்துக் கொடுத்தேன். எதிரிக்கு என்ன காரணத்திற்காக கடன் கொடுத்தேன் என்றால் எதிரி ரியல் எஸ்டேட் தொழிலில் லாபம் பெற்று தருவதாக கூறி பணம் பெற்றார். DMAX Capitals Private Limited என்ற நிறுவனத்தை தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட கம்பெனி என்ன தொழில் செய்து வருகிறது என்றால் ரியல் எஸ்டேட் மற்றும் டிரேடிங் தொழில் செய்து வருகிறது.

2) எனது வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்கண்ட அறிவிப்பில் ஷேர் டிரேடிங்கில் முதலீடு செய்து லாபம் பண்ணி தருவதாக எதிரி கூறியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரில் எதிரி நிறுவனத்தில் நான் முதலீடு செய்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி DMAX Capitals Private Limited நிறுவனத்தில் 2021-ல் முதலீடு செய்தேன். எதிரி நிறுவனத்தில் முதலீடு செய்தததில் இருந்து எதிரி எனக்கு லாபம் தரவில்லை என்றால் ஒரு மாதம் ரூ.20,000/-ம் கொடுத்தார். DMAX Capitals Private Limited நிறுவனத்தில் முதலீடு செய்தததில் பொருளாதார குற்றப் பிரிவில் ஒரு புகார் நான் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட புகாரின் அடிப்படையில் DMAX Capitals Private Limited நிறுவனத்தின் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) சாட்சி பின்னிட்டு Capitals secure Private Limited நிறுவனத்தில் தான் முதலீடு செய்தேன் என சாட்சியம் அளிக்கிறார். அதன் மீது தான் புகார் அளித்தேனா என்றால் நான் செந்தில்குமார் மீது தான் புகார் அளித்தேன். நான் செந்தில்குமார் மீது கொடுத்த புகார் கிரைம் எண்.5/2020 பொருளாதார குற்ற பிரிவில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் Capitals secure Private Limited நிறுவனததின் மீதும் புகார் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். Capitals secure Private Limited முதலீடு செய்த ரூ.4 லட்சத்தை மேற்சொன்ன

நிறுவனம் தான் தரவேண்டும் என்றால் சரிதான். Capitals secure Private Limited நிறுவனம் தரவேண்டிய ரூ.4 லட்சம் தொகைக்கு மேற்சொன்ன நிறுவனத்தின் இயக்குநர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். Capitals secure Private Limited நிறுவனம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்காக செந்தில்குமார் கொடுத்த காசோலை மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4) நிறுவனம் செலுத்த வேண்டிய தொகைக்காக ஒரு தனிப்பட்ட நபர் மீது வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல, நான் செந்தில்குமாருக்கு தனிப்பட்ட முறையில் தான் பணம் கொடுத்துள்ளேன். நிறுவனம் செலுத்த வேண்டியதாக உள்ள ரூ.4 லட்சம் கடனுக்கு செந்தில்குமார் என்ற தனிப்பட்ட நபரிடம் இருந்து காசோலை பெற்றேன் என்றால் செந்தில்குமார் பணத்தை திருப்பி தராத பட்சத்தில் காசோலையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறினார். எதிரி கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்த தேதி, மாதம், ஆண்டு என்னவென்றால் 25.12.2021 ஆகும். நான் மேற்படி நிறுவனத்தில் முதலீடு செய்த மாதம் என்னவென்றால் ஜுன் 2021 ஆகும். எதிரி கடனுறுதிச் சீட்டு மற்றும் காசோலை எழுதிக் கொடுத்த தேதியன்று நான் எந்த பணமும் முதலீடு செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடனுறுதிச் சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) எதிரி கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்த சமயத்தில் உடன் யாருமில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை முதல் முறை வசூலுக்கு தாக்கல் செய்த பொழுது திரும்பிய விவரத்தை எதிரிக்கு எழுத்துப் பூர்வமாக தெரிவித்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தெரிவித்தேன். எனக்கு காசோலை பரிவர்த்தனை குறித்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வங்கி கணக்கில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும் பொழுது காசோலையில் கோடிட்டு தான் தாக்கல் செய்வார்கள் என்றால் சரிதான். வழக்கு காசோலையில் குறுக்கு கோடு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

(குறிப்பு: வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் வழக்கறிஞர் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.)

Take down by / before me in
open court read over / interpreted
to the witness in the presence of the
accused / accused's pleader and
admitted by the witness to be correct.
Sd/-Tmt.S.Sathiya, B.A., B.L.,
Judicial Magistrate,
F.T.C.-II @ M.L.,Coimbatore